**காலி மாநகர சபை**
**காலி மாவட்டம்**

-----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஒக்தோபர் 25 ஆம் திகதி மா நகர சபையின் நகர ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காலி மா நகர சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமான நிலைமையினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்கு வைக்கும் போது சபையினால் கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 422,218 ஆன ஆயுர்வேத மருந்துகளின் பெறுமதி மற்றும் மீளச் செலுத்த வேண்டிய ரூபா 384,540 ஆன ஊழியர் பிணை வைப்பு வட்டி என்பன நிதிக்கூற்றுக்களில் இருந்து கைவிடப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளூராட்சிமன்ற ஓய்வூதிய நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய ரூபா 99,959,831 ஆன பங்களிப்புத் தொகைக்காக கணக்குகளில் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 33 உத்தியோகத்தர்களினதும் ஊழியர்களினதும் 498 சம்பளமற்ற விடுமுறை நாட்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 950,562 ஆன தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 256,492,835 கூட்டுத்தொகையான 15 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 63,115,643 ஆன வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

### 1.3.4 தொங்கல் கணக்குகள்

2003 ஆண்டு முதல் முன் கொண்டு வரப்பட்டுக் காணப்படும் ரூபா 111,553 இற்கான தொங்கல் கணக்கின் வரவு மீதியை இனங்கண்டு தேவையான சீராக்கங்களை செய்து கணக்குகளைத் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.5 பெற வேண்டிய கணக்குகள்

நீண்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்படும் ரூபா 43,331,342 ஆன 07 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளை இனங்கண்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.6 செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள்

2011 ஆம் ஆண்டு தொடக்கம் தீர்வு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளாது நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதியக் கணக்கின் ரூபா 111,899 தொகையான மீதிகளை மீளாய்வாண்டின் போதும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.7 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 216,588,565 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடும் ரூபா 269,735,790 கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோர் மீதிகள் மற்றும் ரூபா 232,143,510 தொகையான கடன்பட்டோர் மீதிகள் தொடர்பான பதிவேடுகள், காலப்பகுப்பாய்வும், மீதி உறுதிப்படுத்தல்களும் ரூபா 74,522,480 கையிருப்பு தொடர்பான பொருள் மெய்மையாய்வு அறிக்கை மற்றும் அட்டவணைகளும் ரூபா 37,173,221 தொகையான ஊழியர் கடன் தொடர்பான காலப்பகுப்பாய்வு அறிக்கைகளும் ரூபா 96,846,605 கூட்டுத் தொகையான மீளச் செலுத்த வேண்டிய வைப்புப் பதிவேடுகள், அட்டவணைகள், காலப்பகுப்பாய்வு அறிக்கைகளும் ரூபா 14,145,799 தொகையான ஏனைய வருமானம் மற்றும் ரூபா 626,740 தொகையான முற்பணம் தொடர்பான பட்டோலைகள் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தன.

### 1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இனங்காமை

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571(1)(2) | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 48,809,693 கூட்டுத்தொகையான மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 1645 மற்றும் 1646 | சபைக்குச் சொந்தமான 85 வாகனங்களுக்காக மீளாய்வாண்டின் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் சம்பவப் பதிவேட்டுப் புத்தகங்களும் பேணப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின சுற்றறிக்கை | மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,027,415 தொகையான கணனி, துணைக் கருவிகள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக மாநகர சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 43,967,186 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விடகுறைந்த வருமானம் ரூபா 40,584,412 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வண்டின் நிதி விளைவுகளில் ரூபா 84,551,598 ஆன அதிகரிப்பொன்று தென்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முறையாக ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்யப்படாமையால் மீளாய்வாண்டின் போது சபையின் வருமானத்தில் ரூபா 34,392,145 ஆன பணம் சபையினால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த ஊழியர்களின் சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவு செய்வதற்காக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் மீண்டுவரும் வருமானத்திற்கு ஒப்பாக மீண்டுவரும் செலவினம் 92 சதவீதமாக இருந்தமையால் சபையின் நிதி நிலைமை மற்றும் நிதிக்கட்டுப்பாட்டின் பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரு ஆண்டுகளுக்குரிய வருமானத்திற்கான உதவிகள், சுய வருமானமீட்டல் மற்றும் மீண்டுவரும் செலவினம் என்பவற்றினது பொழிப்பு பின்வருமாறு,

| ஆண்டு | மொத்த மீண்டுவரும் வருமானம் | வருமான மானியம் | சுய வருமான ஈட்டல் | மொத்த மீண்டுவரும் செலவினம் | சுய வருமானம் உழைப்பிலும் கூடிய மீண்டுவரும் செலவினம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 525,301,980 | 266,347,644 | 258,954,336 | 481,334,795 | 222,380,459 |
| 2014 | 326,641,101 | 165,582,100 | 161,059,001 | 367,225,514 | 206,166,513 |
| 2013 | 341,095,262 | 171,897,907 | 169,197,355 | 294,466,736 | 125,269,381 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒவ்வொரு ஆண்டிலும் வருமான பெறுவனவுகளிலும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் சுய வருமானம் ஈட்டல் வருமானங்களிலும் அதிகரிப்பொன்று தென்பட்டது.

(ii) சபையின் மீண்டுவரும் செலவினம் தொடர்ச்சியாக அதிகரிக்கும் வேகத்தில் கருத்திற்கொள்ளக் கூடிய பெறுமதியில் அதிகரித்திருந்தன. எனினும் அது தொடர்பாக கருத்திற்கொண்டு செலவினக் கட்டுப்படுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சுய வருமானம் ஈட்டல் வருமான அளவினை விஞ்சி ஒவ்வொரு ஆண்டினதும் மீண்டெழும் செலவினம் கருத்திற் கொள்ளக்கூடிய உயர் பெறுமதியுடன் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் வேகத்தில் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iv) சபைக்கு வருமான மானியம் கிடைக்காமல் இருந்தால் சபையின் வருமானத்திலிருந்து எந்தவகையிலும் மீண்டெழும் செலவினத்தை மேவுகை செய்வதற்கு இயலுமையும் இல்லையென தென்பட்டது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வீதவரி, நில வரி மற்றும் விளைச்சல் வரி, அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் வியாபார வரி உட்பட ஏனைய வாடகை என்பற்றின் கூட்டுத்தொகை ரூபா 115,298,821 ஆகவும் ஆண்டின் பட்டியலிடலில் ரூபா 140,512,711 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. அத்துடன் ஆண்டினுள் ரூபா 101,936,708 அதாவது 39.8 சதவீதமான பெறுமதி அறவிடப்பட்டமை அறவீடுகளின் திருப்திகரமான மட்டமொன்றில் காணப்படவில்லையென அவதானிக்கப்பட்டது.

### 2.3.2 வீதவரி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி ரூபா 115,102,938 ஆன நிலுவை வீத வரி மீதியொன்று காணப்பட்டதுடன் அது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 50 சதவீத அதிகரிப்பொன்றை காண்பித்தது. மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 252(1) (ஆ) ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) 07 வரி சேகரிக்கும் உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 1,307,678 கூட்டுத்தொகையான தரகுப் பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், நிலுவை வீத வரியில் 13 சதவீதம் அளவான சிறிய பெறுமதியே அறவிடப்பட்டிருந்தது.

(இ) சபை அதிகாரப் பிரதேசத்தின் 15 வீதவரி பிரிவுகளின் 12 பிரிவுகளிலிருந்து ரூபா 50,000 இற்கு மேற்பட்ட மீதிகள் காணப்பட்ட 130 குத்தகையாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 20,362,914 ஆன நிலுவை காணப்பட்டது.

### 2.3.3 குத்தகை வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் சபையின் சிற்றுண்டிச்சாலைக்காக மூன்று குத்தகையாளர்ளிடமிருந்து ரூபா 341,004 தொகையும் பஸ் தரிப்பு கட்டிடத்திற்காக பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையிடமிருந்து ரூபா 1,034,869 தொகையும் றுஹுனு பஸ் கம்பனியிடமிருந்து ரூபா 1,755,584 என ரூபா 3,131,457 கூட்டுத்தொகையான வீதவரி தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் 191 குத்தகையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 03 ஆண்டுகளை விஞ்சியருந்த ரூபா 22,836,054 ஆன நிலுவை கடை வாடகையும், 156 மரக்கரி குத்தகையாளர்களிடமிருந்து ரூபா 845,819 கூட்டுத்தொகையான நிலுவை வாடகைப் பணமும் அறவிடப்பட வேண்டியிருந்தன.

(இ) சபைக்குச் சொந்தமான மூன்று கடைகளை குத்தகைக்கு எடுத்த குத்தகையாளர்களிடமிருந்து ரூபா 3,822,051 ஆன நிலுவை கடை வாடகை காணப்பட்ட போதிலும் அப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 1,673,486 தொகையான நிலுவை வாடகைப் பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அதற்குரிய பட்டோலைகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 4,894,595 ஆன நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் அவதானிக்கப்பட்டதுடன், அது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 73 சதவீத அதிகரிப்பொன்றாகும்.

### 2.3.5 ஏனைய வருமானம்

மீளாய்வாண்டின் இறுதியில் ஏனைய நிலுவை வருமான மீதி ரூபா 27,572,424 ஆக இருந்ததுடன் இரண்டு குத்தகையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 176,176 கூட்டுத்தொகையான நிலுவை மோட்டார் வண்டி நிறுத்துமிடக் கட்டண மீதிகள் மூன்று ஆண்டு காலத்தையும் மிகைத்திருந்தன.

### 2.3.6 களியாட்ட வரி

2007 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வரும் ரூபா 12,478,059 தொகையான நிலுவை களியாட்ட வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3.7 காணியை குத்தகைக்கு வழங்குதல்

#### (i) படதுவ போகஹவத்த நகர காணி குத்தகைக்கு வழங்குதல்

சபைக்குரிய படதுவ போகஹவத்த பெயரிலான காணி தனியார் கம்பனியொன்றுக்கு ரூபா 150 மாதாந்த குத்தகைக்கு முதலாவது 30 ஆண்டுகளுக்கும் அக்காலப்பகுதி முடிவடைந்தவுடன் மேலும் 30 ஆண்டுகளுக்காக முன்னைய குத்தகை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நிபந்தனைகளின் கீழ் உடன்படிக்கையை நீடிப்பதற்கும் முதலாவது உடன்படிக்கையில் இணங்கப்பட்டிருந்தது. எனினும் குத்தகை பணத்தை திருத்துவதற்கு உரிய நிபந்தனை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ii) கொட்டுவ பெடரல் வீதியில் உள்ள காணியை குத்தகைக்கு வழங்குதல்

சபையால் பயன்படுதப்படும் 64 மற்றும் 64(ஓ) ஆம் இலக்க 42.5 பேர்ச் அளவிலான காணி நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்கு கையளிப்பு முறைமையில் 2015 ஒக்தோபர் மாதம் 01 ஆம் திகதி முதல் 30 ஆண்டுகளுக்காக தனியார் தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 40(1)(ஊ)(1) பிரிவின் பிரகாரம் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினதோ அல்லது சனாதிபதியின் அங்கீகாரமோ கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே காணியின் சரியான உரிமை மாநகர சபையிடம் இல்லையென காணி உரிமை நிர்ணயத் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

#### (iii) ரன்ஜன் கட்டிட காணி மற்றும் அதில் உள்ள கட்டிடத்தை குத்தகைக்கு வழங்குதல்

காணி மற்றும் அதில் அமைந்துள்ள கட்டிடத்தின் வியாபார பெறுமதி என்பவற்றைக் கருத்திற் கொள்ளாமல் குத்தகை தொகை தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டுக்

குழுவின் பரிந்துரைகள் கருத்திற் கொள்ளப்படாமல் கூடிய கைப் பணம் செலுத்தியிருந்த நபர் முதலீட்டாளராக தெரிவுசெய்யப்பட்டிருந்தார். குத்தகையாளரிடமிருந்து ரூபா 7,770,000 ஆன கைப் பணம் அறவிடப்பட்டிருந்த போதிலும் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 40(1)(ஊ)(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. காலி–சுற்றுப்புற சூழல் பிரதேச செயலகத்தினால் கட்டிடத்தை உடைத்து அகற்றுமாறு செய்யப்பட்ட எழுத்துமூல அறிவித்தலையும் கருத்திற் கொள்ளாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் இடமாற்றம் பெற்றுச்சென்ற 45 பேரிடமிருந்து ரூபா 2,576,181 ஆன கடன் மீதிகள், ஓய்வுபெற்ற 17 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,032,321 ஆன கடன் மீதிகள் மற்றும் சேவையிலீடுபட்டிருந்த போது மரணித்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 218,744 ஆன கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு தாமதமாக பங்களிப்புத் தொகை அனுப்பியமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 371,100 ஆன மேலதிக கட்டணமொன்று கொடுப்பனவு செய்ய நேர்ந்த போதிலும், அது தொடர்பாக நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினர் இனங்காணப்பட்டு அவர்களுக்கு பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முறையான அங்கீகாரமொன்றைப் பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 480,162 கூட்டுப்பெறுமதியான 03 மதிப்பிழந்த காசேலைகள் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஆதனங்களை தடைசெய்யும் உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 4,223,612 ஆன தரகுப் பணம் கணக்கிடப்பட்ட முறை, சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் மற்றும் தரகுப் பணம் செலுத்தியதை உறுதிப்படுத்தும் எவ்வித எழுத்துமூல தகவலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 3.2 பதவியணியினர் நிர்வாகம்

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 39 ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 2015 ஆம் ஆண்டிற்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 9,934,212 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரிய 04 பதவிகளில் 81 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் 03 பதவிகளில் உள்ள 50 மிகை பதவியணியினர் எண்ணிக்கையை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 வாகன நிர்வாகம்

சபையின் 85 வாகனங்களுடன் கூடிய போக்குவரத்து அணி தொடர்பாக செய்யப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2014 திசெம்பர் 26 ஆந் திகதிய 08/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு இணங்காமல் 70 வாகனங்களுக்குரிய காப்புறுதி மேவுகை தனியார் காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

(ii) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சபைக்குச் சொந்தமாக இருக்கும் போது காணாமல் போயிருந்த 04 வாகனங்கள் தொடர்பாகவும் இலக்கம் 50-6418 ஆம் இலக்க கெப் வண்டிக்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாகவும் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கோ அல்லது ஆரம்ப பரிசோதனை மேற்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சபையின் வீடுகள்

சபைக்குச் சொந்தமான அரசின் வீடுகள் தொடர்பாக பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 21 அரச வீடுகளில் 07 வீடுகள் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைமையில் காணப்பட்டன.

(ii) தாபனவிதிக் கோவையின் xix ஆம் அத்தியாயத்தின் 6.15 ஆம் பிரிவிற்கு இணங்காமல் மூன்று உத்தியோகத்தர்களுக்கு வீடுகளில் குடியிருப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு உத்தியோகத்தரிடமிருந்து தண்டப்பணம் அறவிடுவது உட்பட மற்றுமொருவரிடமிருந்து 2000 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக காணப்படும் ரூபா 61,410 ஆன நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 தகணச்சாலை நிர்மாணம்

தடல்ல கனத்தே இரண்டு எரியும் சாடங்களுடன் தகணச்சாலையொன்றை நிர்மாணிப்பதற்கும் இரண்டு சாடகங்களை பொருத்துவதற்கும் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 16,718,187 செலவிப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையைக் கருத்திற்கொள்ளாமல் இந்நிர்மாணத்திற்காக சபை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதி முதல் 2016 ஏப்ரல் 27 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் 01 ஆம் இலக்க சாடகம் 284 நாட்களும் 02 ஆம் இலக்க சாடகம் 391 நாட்களாக செயலற்று காணப்பட்டன.

(ii) ஒப்பந்தக் கம்பனியால் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட நிபந்தனைகளை மீறி உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை காலம் கடந்திருந்தமைக்காக தண்டப் பணத்தை அறவிடுவதற்கோ அல்லது சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கோ சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) நிர்மாணத் தவறொன்று காரணமாக சாடகங்களை செயற்படுத்த முடியாத நிலைமையொன்று ஏற்பட்டிருப்பதாக தேசிய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தினால் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 3.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மோட எல பம்பி ரூபா 2,561 ஆன மின்சாரப் பட்டியல் செலுத்தப்படாமையால் துண்டிக்கப்பட்டிருந்த மின்சார இணைப்பை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 39,164 ஆன மேலதிக கட்டணமொன்று கொடுப்பனவு செய்ய நேர்ந்திருந்தது.

(ஆ) 1985 சனவரி முதல் 2008 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய ஆதனங்களை தடை செய்யும் 13 உத்தியோகத்தர்களுக்கு நிலுவை ஊழியர் சேமலாப நிதியம் கொடுப்பனவு செய்யும் போது ஊழியர்களின் பங்களிப்பான ரூபா 357,676 தொகை மற்றும் மேலதிக கட்டணமாக மொத்தம் ரூபா 1,286,095 தொகை சபையால் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.7 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

2009 ஆம் ஆண்டின் போது ரூபா 4,000,000 செலவில் ஆரம்பிக்கப்பட்டிருந்த கழிவுப் பொருள் மீளமைப்பு செயற்திட்டத்தின் கொம்போஸ்ட் பசளை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் செயலற்று காணப்படுவதாகவும் ரூபா 126,500 கிரயமான இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையால் அவ்விடத்தில் சிதைவடைந்து காணப்படுவது அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட 06 செலவின விடயங்களில் ரூபா 30,557,397 கூட்டுத்தொகையான சேமிப்புக்களும், மேலும் 03 செலவின விடயங்களில் நிதிஏற்பாட்டு வரையரையை விஞ்சி ரூபா 29,368,191 ஆன செலவினமும் 05 வருமான விடயங்களில் இலக்கினை அடையாத ரூபா 116,196,264 வருமானமும் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லையென அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

05 உத்தியோகத்தர்கள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு இணைக்கப்பட்டு சம்பளமும் படியுமாக ரூபா 2,232,251 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் மற்றும் 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/நஆ.வே ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரது (தென்மாகாணம்) சுற்றறிக்கைப் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

கீழே காணப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

**(அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கடதாசி மீள் சுழற்சி செயற்திட்டத்தை நடாத்திச் செல்லாமையால் குறித்த பொருட்க், உபகரணங்கள் மற்றும் கட்டிடங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

**(ஆ) விளைவற்ற வாகன சொத்துக்கள்**

2015 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய கா/மாநச/நிக/2013/3/76 ஆம் இலக்க நகர ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் ஆகக்குறைந்தது ரூபா 140,000 கேள்வியின் கீழ் மாநகர சபையிடமுள்ள எஸ்கவேட்டர் (Takeuch Excavator) இயந்திரத்தை கைதவிர்ப்பதற்காக ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 ஏப்ரல் 27 ஆந் திகதி வரையிலும் அவ்வியந்திரம் கழிவுப்பொருள் அகற்றப்படும் இடத்தில் சிதைவடைந்து காணப்பட்டது.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்
(ஊ) கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(எ) வாகனக் கட்டுப்பாடு
(ஊ) ஊழியர் முகாமைத்துவம்